விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 050 வள்ளுவர் ஆண்டு 2057 தை 24 சனிக்கிழமை (07.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# நீதிமன்றைத் தொடர்ந்து புறக்கணிக்கும் கோட்டாபய

## யாழில் கண்டனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் தொடர்ந்து நீதிமன்றைப் புறக்கணித்து வரும் நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழில் நேற்று கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)




## அவசர காலநிலை

### மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

பொது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவது தொடர்பான தீர்மானம் 104 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து; மாணவன் மரணம்

(வவுனியா)

வவுனியா வாரிக்குட்டியூரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.



15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் வருவதற்கு அச்சுறுத்தல் கோட்டாபய நீதிமன்றில் சத்தியக்கடதாசி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடர்பிலும் சாட்சியம் அளிப்பதற்காக யாழ்ப்பாணம் வருகைதர தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் இணையவழியில்சாட்சியம் வழங்க

15ஆம் பக்கம் பார்க்க

## ஒரே நாளில் சத்திரசிகிச்சை

### யாழ்.போதனாவில் புதிய சிகிச்சை மையம் திறப்பு



15ஆம் பக்கம் பார்க்க

### வரலாற்றில் முதன் முறையாக

## இ.போ.ச பேருந்துகளில் பெண் நடத்துநர்கள்



15ஆம் பக்கம் பார்க்க

## 431 சுற்றுலா மையங்கள் வடக்கு மாகாணத்தில் அடையாளம்

### அபிவிருத்தியை விரைவுபடுத்துமாறு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 431 சுற்றுலா மையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்யுமாறு வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தல்

14ஆம் பக்கம் பார்க்க



### கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில்

## உள்நாட்டு வழிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

நாட்டில் கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டு வழிமுறைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். எவ்வாறாயினும், இலங்கையின் வெளியுறவுக்

14ஆம் பக்கம் பார்க்க

### அவசர காலச் சட்டம்

## எந்தவொரு தரப்பையும் ஒடுக்க பயன்படுத்தப்படாது

### சபையில் பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகங்களையோ அல்லது எந்தவொரு தரப்பினரையோ ஒடுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
01 - 08 - 1942

இறப்பு
04 - 02 - 2026

## அம்பிகாபதி பாலசுப்ரமணியம்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட அம்பிகாபதி பாலசுப்ரமணியம் அவர்கள் கடந்த (04.02.2026) புதன்கிழமை அன்று காலமானார் .

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் (ஓய்வுபெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரியின் கணித ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயலட்சுமி (அமெரிக்கா), ஜெயநந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேசராஜா (அமெரிக்கா), யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஹானா (அமெரிக்கா), ஆகாஷன் (அமெரிக்கா), திவ்வியா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அரியரட்ணம் (கனடா), அருளம்பலம் (கனடா), அருந்தவதேவி (கனடா), தனலட்சுமி, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசல்யாதேவி (கனடா), காலஞ்சென்ற ராஜேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு (கனடா), காலஞ்சென்ற அருளானந்தம், பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்) நடைபெற்று காலை 9 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

(6756)

தகவல் :
குடும்பத்தினர்


மலிவு விலையில்
பாடசாலை மாணவர்களுக்கான
SOCKS (காலுறைகள்)




மொத்த கொள்வனவுக்கு
விசேட விலைக்கழிவு
076 315 6470
(C-4954)
ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna.

பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- றொட்டி வீசுபவர் – 5 பேர்
- சமையல் செய்யக்கூடியவர் – 5 பேர்
- துப்பரவுப் பணியாளர் – 2 பேர்
- விற்பனைப் பிரதிநிதி – 5 பேர்

- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
- தேவைப்படுவோருக்கு தங்குமிடம், உணவு வசதி செய்து கொடுக்கப்படும்
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு
076 148 7678
(6762)

தேவை

யாழ்.நகரில் கச்சேரி, சுண்டிக்குழி வீதி, யாழ்.நீதிமன்றம், A9 வீதி கச்சேரி போன்ற இடங்களுக்கு அண்மையாக 10 - 16 பரப்புக்குள்ள காணிகள் அதி கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்யப்படும்.

தொடர்பு : 077 723 2535
(C-4956)



## லாஃப்ஸ் எரிவாயு விலை அதிகரிப்பு

நள்ளிரவுடன் அமுலுக்கு வரும் வகையில்லாஃப்ஸ் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் நேற்று (6) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் 12.5 கிலோகிராம் எடை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 80 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நள்ளிரவு முதல் 12.5 கிலோகிராம் எடைகொண்ட லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 4,330 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.(ம-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி
## கணபதிப்பிள்ளை இராசபூபதி

திதி : தேய்பிறை சஷ்டி

ஆலம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்துவிடாதிருக்க
வேர் என இருந்தீர்களே அம்மா!
மாயப் புயல் வடிவில்
காலனவன் இன்னுயிர் பறிக்க
சோகத்தை தந்துவிட்டு
சொல்லாமல் சென்றதென்ன?
நல்வழிகள் காட்டி எமக்கு
ஒளி கொடுத்த தீபமே அம்மா.
நாம் மண்ணில் வாழும் வரை
அழியாது உங்கள் நினைவு...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு
20.12.1949

உதிர்வு
19.01.2025

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(6772)

என்றென்றும் உங்கள் நினைவுடன்...
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 26 ஆவது அகவை தின நினைவுகள்

அமரர்.

## சண்முகநாதன் சந்துதன்

மலர்வு 07.02.2000

உதிர்வு 08.09.2009





**அன்புச் சகோதரனே சந்து அண்ணா!**

இப் புவிதனில் எம்மை மகிழ்விக்க
நீங்கள் வந்துதித்த
நினைவு நாள் அண்ணா!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உம் மீது நாம் கொண்ட அன்பு
என்றும் மாறாது, மறையாது
நம் பெற்றோர் உம்மைப் பற்றிக்
கூறிய கதைகள்
என்றும் எம் மனதில் நிலைத்து நிற்கும்
ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ!
உம்மை நினைத்து என்றும்
புலம்பித் தவிக்கின்றோம்
நீங்கள் வாழும் போது
உங்கள் பிறந்த தினம்
பெரும் கோலாகலமாக நடைபெற்றதாக
அம்மா கூறுவார்
இத்தினம் என்றும் எமக்கு
பொன்னான தினமாகும்
என்றும் உம்மை மறவோம்
எம் பெற்றோரின் ஆசியுடன் நீங்கள்
அமைதி கொள்வீர்கள்
உங்களை காண என்றும்
ஏங்கித் தவித்து நிற்கும் உறவுகள்.



*பிறந்தநாள் வாழ்த்துக்கள் அண்ணா.*


*உங்கள் பிரிவால் துயருறும்*
**அன்புச் சகோதரர்கள்**
**தேவசந்துதன், தேவசாத்வீகன்**
**மற்றும் உறவுகள்.**

**"சண்முகநாதம்"**
**கட்டைப்பாலிலேன்,**
**ஆனைக்கோட்டை.**

(6759)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
27 - 10 - 1935

இறப்பு
06 - 02 - 2026

## பொன்னன் அம்மா

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் அம்மா அவர்கள் நேற்று (06.02.2026) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னன் அவர்களின் அன்பு மனைவியும் ஆண்டி வள்ளியின் அன்பு மகளும் ஆண்டி நாகியின் பாசமிகு மருமகளும் தெய்வி சின்னக்குட்டியின் சகோதரியும் தங்கராஜா(CTB), பூமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிமலாம்பிகை, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதர்ஷன், நிஜாந்தினி, சுகர்ஷன்(கோபி), பிரியதர்ஷன், தர்ஜீத்தா, காந்தரூபன், யோகினி ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும் அதியன், ஆரன், ஆதிரை, அகரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விக்கினேஸ்வரா வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(2028)

தகவல்:
குடும்பத்தினர்



இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, இந்திய வெளியுறவு விவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து கலந்துரையாடினார். இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான பிணைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் குறித்த சந்திப்பானது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## கடை விற்பனைக்கு

கல்வியங்காட்டு சந்தியில் கடை உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
076 311 9485
076 0503 863

(6774)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

07.02.2026

அமரர் கலாவதி தர்மரத்தினம்



மலர்வு 1953.09.29
உதிர்வு 08.01.2026

அன்பின் திருவுருவமாய் அவனியில் அவதரித்து
எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாய் என்றுமிருந்து
மற்றவரின் மனமறிந்து வாரிக்கொடுத்து
புன்னகை வதனத்தால் அனைவரையும் வசீகரித்து
தான்வாழ்ந்த வாழ்வை எமக்கு முன்னுதாரணமாய்காட்டி
எதிர்பாராத தருணத்தில் எம்மைவிட்டு சென்றதேனோ?
நினைவில் என்றும் எம்முடன் ஒன்றித்திடுவீர்கள்.

அமரரின் அந்தியேட்டிக்கிரியைகள் 07.02.2026 இன்று கீரிமலை புனித புட்கரணியில் இடம்பெற்று நாளை 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லமான கலாகேந்திராவில் பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலாகேந்திரா, மனோகரா, அல்வாய்

(C-4958)

இங்ஙனம் : பிள்ளைகள்

உ
ஶ்ரீராம ஜெயம்

# விவாஹ சோபன சுபமுகூர்த்தப் பத்திரிகை

மஹா ராஜராஜ ஸ்ரீ ........................................................................ அவர்களுக்கு

அநேக நமஸ்காரம் / உபயகுசலோபரி

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விசுவாவசு ஞூ தை மீ 25ம் நாள் (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 08.43 முதல் 10.22 மணிவரையுள்ள மீன லக்ன சுபமுகூர்த்த வேளையில்

கோவையாதீனம் நயினைக்குருமணி பாரத்வாஜ கோத்திரம்
**சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள் இராஜேஸ்வரியம்மா** தம்பதியின் பௌத்திரியும்
நகுலேஸ்வரம்
**இராமசந்திரகுருக்கள் சரோஜினியம்மா** தம்பதியின் தௌஹித்திரியும்
**சண்முகராஜக்குருக்கள் நகுலாம்பிகைஅம்மா** தம்பதியின்
ஏக குமாரியுமான
## சௌபாக்கியவதி ராஜதுளசி
என்கின்ற வதுவை



கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம் பாரத்வாஜ கோத்திரம்
**சிவஸ்ரீ தி. கார்த்திகேயக்குருக்கள் சாரதாம்பாள்** தம்பதியின் பௌத்திரனும்
மாவை ஆதீனம்
**துரைச்சாமிக்குருக்கள் விசாலாக்ஷியம்மா** தம்பதியின் தௌஹித்திரனும்
**துரைச்சாமிக்குருக்கள் அகிலாண்டேஸ்வரிஅம்மா** தம்பதியின்
கனிஷ்ட குமாரனுமான
## சிரஞ்ஜீவி திவாகரசர்மா
என்கின்ற வரனுக்கு

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்து வைப்பதாக குலதெய்வங்களுடைய திருவருளும் காஞ்சி காமகோடி பெரியவரின் குருவருளும் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட மேற்படி சுபமுகூர்த்தம் திருவருள்மிகு பலானை கன்னகை அம்மன் தேவஸ்தானத்தில் (கோப்பாய்) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் பந்துமித்திர குடும்ப ஸமேதராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்து விருந்துபசாரத்தில் கலந்து சபையை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| சமாவர்த்தனம் | : | 07.02.2026 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும். |
| மணமகன் இல்ல வரவேற்பு உபசாரம் | : | 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறும். |
| மணமகள் இல்ல வரவேற்பு உபசாரம் | : | 11.02.2026 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும். |

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்

சிவஸ்ரீ. ப. சண்முகராஜக்குருக்கள் நகுலாம்பிகை தம்பதியினர்
சிவஸ்ரீ. ச. கௌரிசங்கரக்குருக்கள் தேனுகா தம்பதியினர்
பிரம்மஸ்ரீ ச. இராஜசங்கரசர்மா
பிரம்மஸ்ரீ ச. சங்கரசுதசர்மா
G. ஸ்ரீமஹதி, G. ஸ்ரீதீக்ஷித், G. ஸ்ரீஸாக்ஷித்
"அம்பிகை வாசா"
கண்ணகை அம்மன் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
076 621 9793, 077 5164185

சுபமஸ்து

இரு வீட்டார் அழைப்பு

வைபவத்திற்கு உயிரூட்டுவது தங்களின் மகத்தான வருகை மாத்திரமே

சிவஸ்ரீ கா. துரைச்சாமிக்குருக்கள் அகிலாண்டேஸ்வரி தம்பதியினர்
பிரம்மஸ்ரீ சு. பாலகிருஷ்ணசர்மா பத்மாவதி குடும்பத்தினர்
சிவஸ்ரீ. து. சுப்ரமணியக்குருக்கள் ராஜினி குடும்பத்தினர்
பிரம்மஸ்ரீ து. கிருபாகரசர்மா
"குகபவனம்"
அட்டகிரி கந்தஸ்வாமி கோவிலடி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
021 430 7293, 077 845 8448

(6771)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களின் ஓய்வூதியம் ரத்து!



## உயர்நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

**பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ரத்து செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள "பாராளுமன்ற ஓய்வூதியங்கள் (நீக்கல்) சட்டமூலத்தின்" எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்பிற்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

இந்தச் சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணாக அமையாததால், இதனைப் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறான ஓய்வூதியச் சலுகைகளை வழங்குவது அரசியலமைப்பை உருவாக்கியவர்களின் நோக்கமாக இருக்கவில்லை என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய ஓய்வூதியச் சட்டம் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டிற்கு ஒரு விதிவிலக்காகக் காணப்படுவதாகவும், புதிய சட்டமூலம் அந்த விதிவிலக்கை நீக்கி சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாகவும் நீதிமன்றம் விளக்கியுள்ளது.

இந்தச் சட்டமூலமானது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது தற்போதைய அரசாங்கத்திற்கு மக்களால் வழங்கப்பட்ட தெளிவான ஆணையின் அடிப்படையிலேயே கொண்டுவரப்பட்டுள்ளது என்பதையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டு வந்த இந்த ஓய்வூதிய முறைமையை நீக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைப் பரிசீலித்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 121 (1) உறுப்புரையின் கீழ் இந்தச் சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றம் இது தொடர்பான தமது வியாக்கியானத்தை இரகசியமாக சபாநாயகருக்கு அனுப்பி வைத்திருந்தது.

அதற்கமையவே இந்த வியாக்கியானம் குறித்து பாராளுமன்ற அமர்வில் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, இந்தச் சட்டமூலம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பெற்று வந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## போதைப்பொருள் கடத்தல்

# யாழ்ப்பாண வர்த்தகர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து வந்த பயணி மற்றும் அவரை அழைத்துச் செல்ல சென்ற இருவர் என மூன்று தமிழர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து போதைப்பொருளை வெளியே கொண்டு செல்ல முயன்ற வேளையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்றும் அழைத்துச் செல்ல சென்ற இருவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமான பயணி அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் 26 வயதான வர்த்தகர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அதிகாலை 12.35 மணிக்கு தாய்லாந்தின் பேங்கொக்கிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.


சந்தேக நபர் தனது சூட்கேஸின் அடிப்பகுதியில் இரண்டு பொட்டலங்களில் 02 கிலோகிராம் 116 கிராம் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தார்.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளில், இந்த போதைப்பொருள் மன்னார் பகுதிக்கு எடுத்துச் செல்ல நீர்கொழும்பில் உள்ள ஒரு சுப்பர் மார்க்கெட்டிற்கு அருகில் மேலும் இரண்டு பேர் காத்திருந்தது தெரியவந்தது. கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள், அவர்களில் ஒருவர் 43 வயதுடையவராகும். அவர் அந்தப் பகுதியில் தொழில்நுட்ப வல்லுநராகப் பணிபுரிகிறார்.

மற்றைய நபர் 36 வயதுடைய ஓட்டுநர் என்பது தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் மூவரும் இன்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (நி)

# நிபா வைரஸ் அச்சுறுத்தலை எதிர்கொள்ள நடவடிக்கை




(கொழும்பு)

இலங்கையில் நிபா வைரஸ் பரவலைக் கண்டறியவும், அதற்குப் பதிலளிக்கவும் சுகாதாரத் துறை தனது தயார்நிலையைத் தீவிரப் படுத்தியுள்ளது.


இலங்கையின் முதன்மை ஆய்வகமான வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம் நிபா வைரஸைக் கண்டறியும் திறனை அதிநவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தியுள்ளது.

இதன் மூலம் வைரஸ் தொற்று சந்தேகத்திற்குரிய நபர்களுக்கு ஆரம்பத்திலேயே பரிசோதனைகளை மேற்கொண்டு வைரஸ் பாதிப்பை உறுதி செய்ய முடியும். இதற்காக நவீன தொழில்நுட்பக் கருவிகள் ஆய்வகத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபன வட்டாரம் தெரிவித்துள்ளது. நிபா வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் ஒரு வகை நச்சுயிரி ஆகும்.

முக்கியமாக "பழம் தின்னும் வௌவால்கள்" மூலம் பரவுகிறது. அசுத்தமான உணவு மற்றும் பாதிக்கப்பட்ட மனிதர்களுடனான நேரடித் தொடர்பின் மூலமும் இது பரவக்கூடும்.

இந்த வைரஸால் பாதிக்கப்படுபவர்களில் 40% முதல் 75% வரை உயிரிழக்க வாய்ப்புள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான தொற்றுநோய்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தற்போது இந்த வைரஸிற்குச் சிகிச்சையளிக்கத் தடுப்பூசிகளோ அல்லது பிரத்யேக மருந்துகளோ இல்லை. தீவிரமான மருத்துவக் கண்காணிப்பு மட்டுமே ஒரே வழியாகும். (நி)



யாழ். செம்மணி வீதியின் இரு மருங்கிலும் காணப்படுகின்ற பற்றைகளை அகற்றி வீதியில் இரு மருங்கிணையும் தூய்மைப் படுத்தும் பணி நல்லூர் பிரதேச சபையினால் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டது.

# கெஹெலியவின் மகள் கைது



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மூத்த மகள் சமித்ரி ரம்புக்வெல்ல, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

300 மில்லியன் ரூபாய் பணமோசடி குற்றச்சாட்டு தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டார்.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ், சமித்ரி ரம்புக்வெல்ல கடந்த ஆண்டு ஜூன் மாதம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## விவசாயிகளுக்கு உரமானியம்

(கொழும்பு)

உர மானியம் தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளும் அடுத்த சில நாட்களில் விவசாயி களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிவிப்பை விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

அதன்படி, உரமானியம் வழங்குவதற்குத் தேவையான அனைத்து நிதிகளும் அதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். சமீபத்திய பேரிடர் சூழ் நிலை காரணமாக, உர மானியம் தொடர்பான நிதிகளை வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டதாகவும், அடுத்த சில நாட்களில் அது மீண்டும் வழங்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த குமார நவரட்ண எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன அதனைத் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்கள்; கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்தி திட்டங்களின் விளக்கக் காட்சியினை யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர். உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் அண்மையில் மாநகர மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் பதவி நிலை அதிகாரிகளினால். நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மாநகரம் தொடர்பில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விளக்க காட்சிகள் தெளிவுபடுத்தப்பட்டன. முன்வைக்கப்பட்ட கருத்தாடல்கள் தொடர்பில் உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும். ஆலோசனைகளையும் முன்வைத்தனர். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் தெளிவுபடுத்தல்களை வழுங்கியிருந்தனர்.

கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்களுக்கு மாநகரசபையின் அடுத்த மாதாந்த பொதுக் கூட்டத்தில் அங்கீகாரம்வழுங்கப்பட்டதும். அவை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# திறந்த வெளிகளில் திண்மக்கழிவுகளை எரித்தால் சட்ட நடவடிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**திறந்த வெளியிடங்களில் எரியூட்டல் இடம்பெற்றால் 011 258 7124 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடுகளை அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் உடனடியாக சுற்றாடல் பொலிஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சுற்றாடல் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. அந்த வகையில்,

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் திண்மக் கழிவுகள் தொடர்பாக பொதுமக்களுக்கான போதியளவு விழிப்புணர்வு இருப்பதனால் கழிவுகளை தரம்பிரித்து சேகரிக்க வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரச, தனியார் நிறுவன திண்மக் கழிவுகளை தரம் பிரித்து வழங்குமாறும், மார்ச் முதலாம் திகதியிலிருந்து உள்ளூர் அதிகார சபையினால் திண்மக் கழிவுகள் தரம் பிரித்து சேகரிக்கப்படும்.

ஒலிபெருக்கியின் பாவனையால் அதிகபடியான இடை யூறு ஏற்படின், குறித்த பிரதேச கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் குறித்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு தகவல்களை வழங்குவதன் ஊடாக பிரதேச செயலாளர்கள் அதனை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் வளிமாசடைதல் தொடர்பாக WWW. CA.AQ.LK என்ற இணையத் தளத்தில் பார்வையிட முடியும். டெங்குக் கட்டுப்பாடு தொடர்பாக ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும் போது டெங்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான கண்காணிப்புக்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வழங்க வேண்டும் என தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (8)

## 'கலைஞனின் குரல்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் "கலைஞனின் குரல்" மாதாந்த பத்திரிகை வெளியீட்டு விழா தலைவர் இரா.மதிகரன் தலைமையில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி சுப்பிரமணியம் மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (8)

## கிளிநொச்சி, முல்லைக்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(தருமபுரம்)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபராக M.N.S.மெண்டிஸ் தனது கடமைகளை நேற்றைய தினம் பொறுப்பேற்றுக்கொண்டார். சர்வமத வழிபாட்டைத் தொடர்ந்து இரணைமடுவில் உள்ள பிரதிப்பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இதற்கு முன்பு மேல் மாகாணத் தின் போக்குவரத்துக்கு பொறுப் பாக கடமையாற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (8-316)

## மடு-பாலம்பிட்டி பிரதான வீதியில் உயிருக்கு போராடும் யானை



(மன்னார்)

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலம்பிட்டி பிரதான வீதிக்கு அருகில் காட்டு யானை ஒன்று உயிருக்கு போராடி வந்த நிலையில், அப்பகுதி மக்களால் பொலிஸ் மற் றும் வனவள திணைக்கள அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சுமார் 10 வயது மதிக்கத்தக்கதாக கூறப்படுகின்ற குறித்த யானை எழும்பி நடக்க முடியாத நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு குறித்த பகுதிக்கு யானை கூட்டம் ஒன்று வருகை தந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த யானையை அப்பகுதியூடாக செல்லும் மக்கள் பார்வையிட்டுச் செல்கின்றமையை காணக்கூடியதாக இருந்தது. (8- 285)



தாயக அறக்கொடை நிறுவனத்தால் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் 150 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்களும் 180 மாணவர்களுக்கு சீருடை மற்றும் காலணிகளும் வழங்கப்பட்டன.

குறித்த உதவிப்பொருட்கள் யாழில் உள்ள ராஜா மண்டபத்தில் வைத்து கடந்த 04.02.2026 அன்று வழங்கி வைக்கப்பட்டது.



சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மட்டுவில் வடக்கு கிளை இல.10 விற்பனை நிலைய கோப்.சிற்றி கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

## புகையிலைப் பாவனை தவிர்க்கப்பட்ட பிரதேசமாக சுதுமலை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுதுமலை அம்மன் கோவிலைச் சூழ உள்ள பிரதேசம் புகையிலைப் பாவனை தவிர்க்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனம் செய்யப் பட்டுள்ளது.

சுதுமலை பொதுச் சுகாதார பரிசோதகர் ம.ஜெயபிரதீப்பின் ஏற்பாட்டில் சுதுமலை அம்மன் ஆலய வளாகமும் அதனைச் சூழ உள்ள பிரதேசமும் புகையிலை தவிர்க்கப்பட்ட பிரதேசமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கு மானிப்பாய் பரிஸ் அரிமா கழகத்தினர் அனுசரணை வழங்கியிருந்தார்கள். இதில் கிராம சேவையாளர் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-33)

## புங்குடுதீவில் வாள்களுடன் நடமாடிய இருவர் பொலிஸாரால் கைது

(அராலி)

வேலணை - புங்குடுதீவு, வல்லன் பகுதியில் அபாயகரமான வாள்களுடன் நடமாடிய இரு இளைஞர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் புங்குடுதீவு வல்லன் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே குறித்த இருவரும் வாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இரு வாள்கள் மற்றும் ஒரு கோடரி உட்பட சில பொருட்களும் கைதானவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகள் ஊர்காவற்றுறை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (8-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2027 வரை வேதன உயர்வில்லை

## ஜனாதிபதி திட்டவட்டம்



(கண்டி)

அரச பணியாளர்களுக்கு வழங்கப்படவுள்ள அடிப்படை வேதன உயர்வு முழுமையாக அமுல்படுத்தப்படும் வரை, வேறு எந்தவொரு கொடுப்பனவுகளையும் அதிகரிக்கப் போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்றும் திட்டத்தின் கீழ், மத்திய மாகாண சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டில் 11,000 கோடி ரூபாயும், 2026 ஆம் ஆண்டில் மேலும் 11,000 கோடி ரூபாயும், 2027 ஆம் ஆண்டில் இறுதிப் பகுதியாக 11,000 கோடி ரூபாயும் வேதன உயர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டளவில் அரச ஊழியர்களின் அடிப்படை வேதன உயர்வுக்கு மட்டுமே அரசாங்கம் 33,000 கோடி ரூபாயை செலவிடவுள்ளது.

இவ்வளவு பெரிய தொகையை வேதன உயர்வுக்காக ஒதுக்கியுள்ள நிலையில், மீண்டும் வேறு கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி சிலர் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள்.

யார், எப்படி ஆர்ப்பாட்டம் செய்தாலும், 2027 ஆம் ஆண்டில் மூன்றாவது கட்ட வேதன உயர்வு கிடைக்கும் வரை எவ்வித கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி உறுதியாகத் தெரிவித்தார். (நி)

**யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)**
**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**
**கௌரவிப்பு நிகழ்வும்-2026**

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

காலம் : 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

தலைமை : திரு.செ.ஜெயக்குமார் அவர்கள்
(தலைவர், யா.மா.பா.உ.கூ.சங்கம்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-4995)

(க.செல்வச்சந்திரன்)
செயலாளர்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

நீங்கா நினைவுகளுடன் வாழும் பாசமலர்களின்

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கலாபூஷணம்
செல்லையா மெற்றாஸ்மயில்

திதி: 07.02.2026

எம் வாழ்வின் வழிகாட்டியாய்
என்றும் எம்முடன் வாழும்
பாசமிகு தெய்வங்களே!
பதினாறு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
மறையாது மனதில் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள்
அன்புச் சகோதரர்களின்
ஆத்மா சாந்திக்காக
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



திருமதி. உதயராணி
கோபாலகிருஷ்ணன்

18, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்
தொ.இல:- 021 222 3586

(2025)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### துணைவி வீதி, இல 121/3, வட்டாரம்-07

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 07, துணைவி வீதியிலுள்ள: 121/3 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை கதிரேசு நடராசாவும் பெண் குணபூசணமும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்திற்கு தங்களில் 02ஆம் பேரின் தாய் தந்தையாராகிய அப்புத்துரை நடராசாவும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்கள் சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்றும், குறித்த ஆதனம் அவர்களது கொள்வனவு ஆதனம் என்றும், குறித்த ஆதனம் சம்பந்தமான ஆவணங்கள் அக்கால நிலவரங்களால் அற்றுப் போய்விட்டன என்றும், குறித்த அப்புத்துரை நடராசாவும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்கள் காலஞ்செல்ல குறித்த ஆதனம் அப்புத்துரை நடராசா மகள் மாலினி ஆகியவருக்கு முதுச ஆதனமாக வந்தடைந்திருந்தது என்றும், குறித்த அப்புத்துரை நடராசா மகள் மாலினி ஆகியவர் குறித்த ஆதனத்தை தங்களில் இரண்டாம் பெயருக்கு வாய்ச்சொல் மூலம் நன்கொடையாக அளித்திருந்தார்கள் என்றும், அதன்படி 1984ஆம் ஆண்டிலிருந்து குறித்த ஆதனம் தங்களின் பிரசித்தமான ஆட்சியிலேயே உள்ளது என்றும், ஆதலால் குறித்த ஆதனம் தமது சொந்த ஆதனம் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 4364/28.09.2002ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

ஆசைப்பிள்ளை நாகேந்திரம் கைம்பெண் திருச்செல்வி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4599/20.01.2003ஆம் இலக்க உறுதியால் கதிரேசு நடராசாவும் பெண் குணபூசணமும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

ஆனந்தன் பாஸ்கரன் பெண் கலைச்செல்வி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2627/12.10.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆசைப்பிள்ளை நாகேந்திரம் கைம்பெண் திருச்செல்வி ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை சீதனமாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "பளாக்கை அல்லது பிளாக்கை"
இறை: வட்டுக்கோட்டை மேற்கு தற்பொழுது சங்கரத்தை
விஸ்தீரணம்: நில.பர 1 குளி 9.6
எல்லைகள்: கிழக்கு - கொட்டுடை முருகன் கோவில் ஆதனமும், சங்கரப்பிள்ளை தட்சணாமூர்த்தியினாதனமும் வடக்கு - உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தவராஜா அவர்களால் 05.04.2024ஆம் திகதியில் வழங்கப்பட்ட 5798ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட குளி 2.9 விஸ்தீரணமுடைய பாதை நிலம் மேற்கு - குறித்த படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட மிகுதியாதனம், தெற்கு - கொட்டுடை முருகன் கோவில் ஆதனம்

குறித்த ஆனந்தன் பாஸ்கரன் பெண் கலைச்செல்வி ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆனந்தன் பாஸ்கரன் பெண் கலைச்செல்வி ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(6760)

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி. **சித்திரா விக்கினேஸ்வரன்** Best Wishes!

உப அதிபர் (SLTS-I), BSc, PGDE



**சேவை விபரம்**

- யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 13.01.1993–31.03.1993
- யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 01.04.1993–06.06.1993
- யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 07.06.1993– 14.10.1993
- யா/ மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம் 15.10.1993–31.12.1995
- கிளி/திருவையாறு மகா வித்தியாலயம் 01.01.1996–11.07.1996
- வ/செட்டிக்குளம் மகா வித்தியாலயம் 12.07.1996–25.04.1997
- யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம் 26.04.1997–29.04.2010
- யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி 30.04.2010–24.02.2021
- யா/விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் 25.02.2021–15.03.2021
- யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க பாடசாலை 16.03.2021–21.12.2021
- யா/மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம் 22.12.2021–06.02.2026

எமது பாடசாலையில் 19 வருடங்கள் கணித ஆசிரியராக, உப அதிபராக பன்முக ஆளுமையுடன் உன்னத சேவையாற்றி 06.02.2026 அன்று ஓய்வு பெற்ற உப அதிபர் திருமதி.சித்திரா விக்னேஸ்வரன் அவர்கள் சகல நலன்களுடனும் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்- **ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம்.**

(6761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்யாவுடனான போரில் 55 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் உயிரிழப்பு!

### ஜெலன்ஸ்கி கவலை



(கீவ்)

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே நடைபெற்று வரும் போர் தற்போது நான்காவது ஆண்டைக் கடந்துள்ளது.

இந்த சூழலில், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், ரஷ்யாவுக்கு எதிரான போரில் இதுவரை சுமார் 55 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இப்போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என உலகின் பல நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.



2022ஆம் ஆண்டு தொடங்கிய இந்த மோதலில், இரு தரப்பையும் சேர்ந்த சுமார் 5 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளதாகவும், 15 இலட்சம் பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச ஆய்வுகள் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, இந்தப் போரில் ரஷ்யா தரப்பில் சுமார் 3.25 இலட்சம் பேரும், உக்ரைன் தரப்பில் சுமார் 1.4 இலட்சம் பேரும் உயிரிழந்திருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. (3)

## சூடானில் தலை...

## 42 இலட்...

(கெய்ரோ)

சூடானில் பஞ்சம் தலை... வதால் 42 இலட்சம் பேர் ஊட்ட... பாட்டால் பாதிக்கப்படும் நிலை... என உலகளாவிய பசி கண்கா... எச்சரிக்கை விடுத்துள்ளது.



## திகிலூட்டிய தீ விபத்து! ஆயிரம் வீடுகள் தீக்கிரை



(மணிலா)

பிலிப்பைன்ஸின் பொங்காவோ தீவில் இரவு நேரத்தில் ஏற்பட்ட கட்டுக்கடங்காத தீ விபத்தில், 1,000இற்கும் மேற்பட்ட வீடுகள் சாம்பலாகியுள்ளன.

தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பிலிப்பைன்ஸ் நூற்றுக்கணக்கான தீவுகளைக் கொண்ட ஒரு தீவு நாடாகும். அங்கு தவிதவி மாகாணத்தில் உள்ள பொங்காவோ தீவில், கடந்த 3ஆம் திகதி இரவில் தீ விபத்து ஏற்பட்டது.

வலுவான காற்று வீசியதால் தீ மளமளவென பரவி அங்கிருந்த வீடுகளில் பற்றியது.

பெரும்பாலும் மரம் மற்றும் லேசான பொருட்களால் கட்டப்பட்ட வீடுகள் என்பதால் முழுதுமாக எரிந்து சாம்பலானது.

தீயணைப்பு வீரர்கள் நான்கு மணிநேர போராட்டத்துக்குப் பிறகு தீயைக் கட்டுப்படுத்தினர்.

ஆனால் அதற்குள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகின.

இதனால் 5,000 பேர் வீடுகளை இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தீப்பற்றியதற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. பொங்காவோ நகரில் பேரழிவு நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (நி)



## 10 இலட்சம் லீற்றர் எரிபொ... கப்பல்களை சிறைப்பிடி...

(டெஹ்ரான்)

ஈரான் கடற்பரப்பில் சட்டவிரோதமாக எண்ணெய் கடத்த முயன்றதாகக் கூறி, இரண்டு வெளிநாட்டு எண்ணெய்க் கப்பல்களை அந்நாட்டுப் பாதுகாப்புப் படைகள் தடுத்து வைத்துள்ளன.

ஈரானின் ஃபார்சி தீவுக்கு அருகே, டீசல் உள்ளிட்ட சுமார் 10 இலட்சம் லீற்றர் எண்ணெயுடன் பயணித்த அந்த இரண்டு கப்பல்களும், நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அவை புஷேர் துறைமுக நகரத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தக் கப்பல்களில் இருந்த 15 பணியாளர்கள் தற்போது சட்ட அமுலாக்க அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், ஈரானின் புரட்சிகர காவற்படையைச் சேர்ந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆனால், அந்த எண்ணெய்க் கப்பல்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்பது குறித்த விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...லைவிரித்தாடும் பஞ்சம்
# ...ட்சம் பேர் பாதிப்பு!

...தலை விரித்தாடு
...ட்டச்சத்துக் குறை
...லை ஏற்படலாம்
...ாணிப்பு அமைப்பு



வட ஆபிரிக்க நாடான சூடானில் மூன்று ஆண்டு களாக உள் நாட்டு போர் நடந்து வருகிறது.

அந்நாட்டின் தேசிய இராணுவத்துக்கும், ஆர்.எஸ்.எப். எனப்படும் துணை இராணுவப் படைக்கும் இடையேயான அதிகார மோதல் காரணமாக அங்கு உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

ஆர்.எஸ்.எப். படைகள் சமீபத்தில் டர்பூர் மாகாணத்தின் முக்கிய பகுதியான எல் பஷாரை கைப்பற்றியது.

இதனால் இலட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறி வேறு நகரங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதனால் அங்கு உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் முற்றிலும் பாதிக் கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக டர்பூரில் பஞ்சம் தலை விரித்தாடுகிறது.


ஐக்கிய நாடுகள் சபை ஆதரவுடன் இயங்கும் உலகளாவிய பசி கண்காணிப்பு அமைப்பு அதிர்ச்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.


அதில் வடக்கு டர்பூரில் உள்ள உம் பாரு மற்றும் கெர்னோய் என்ற இரு நகரங்களில் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

உம் பாரு நகரத்தில், 6 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளில் 52.9 சதவீதம் பேரும், கெர்னோயில் 34 சதவீத குழந்தைகளும் கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்பின் தகவல்படி, 2025இல் குழந்தைகள் மற்றும் பெண்களிடையே கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு 37 இலட்சமாக இருந்துள்ளது.

இது 2026இல் 42 இலட்சமாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. (நி)






## ...பொருளுடன் ...டித்த ஈரான்

மேலும், அவை உண்மை யில் எண்ணெய் கடத்தலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகள் இன்னும் அதிகார பூர்வமாக உறுதிசெய்யப்படவில்லை.

இதற்கு முன், கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில், 16 பணியாளர்களுடன் பயணித்த ஒரு வெளிநாட்டு எண்ணெய்க் கப்பலையும் ஈரான் அதிகாரிகள் தடுத்து வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



## கிரீஸ் கடற்பரப்பில் அகதிகள் படகு விபத்து

### 15 பேர் உயிரிழப்பு




(ஏதென்ஸ்)

கிரீஸ் நாட்டின் சியோஸ் தீவுக்கு அருகே ஏஜியன் கடலில் இடம்பெற்ற விபத்தில், குறைந்தது 15 அகதிகள் உயிரிழந்துள்ளனர்.

அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று, ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கிரீஸ் கடலோரப் பாதுகாப்புப் படையின் கப்பலுடன் மோதியதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சியோஸ் நீரிணையில் உள்ள வ்ரோந்தாதோஸ் கடற்பரப்பில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வெளிநாட்டு அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கடலோரப் பாதுகாப்புப் படையின் எச்சரிக்கை ஒளி மற்றும் ஒலிச் சைகைகளை புறக்கணித்து, ஆபத்தான முறையில் பயணித்தபோது, திடீரென பாதுகாப்புப் படையின் கப்பலுடன் மோதியதாக கிரீஸ் கடலோரப் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

மோதலின் பின்னர், அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து கடலில் மூழ்கியதுடன், அதில் பயணித்த அனைவரும் கடலில் வீழ்ந்தனர். உடனடியாக தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் 26 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 11 குழந்தைகள், ஒரு கர்ப்பிணிப் பெண் மற்றும் இரண்டு கடலோரக் காவல் அதிகாரிகள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 14 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கிரீஸ் கடலோர பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. அகதிகளில் பெரும்பாலானோர் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி மாத இராசி பலன்கள்

## உடல் ஆரோக்கியம் உண்டாகும்!



**கிரகநிலை** - இராசியில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் புதன், சனி, ராகு - லாப ஸ்தானத்தில் குரு(வ) என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எதிலும் தன்னுடைய ஈடுபாட்டினை முழுமையாகக் கொடுக்கும் சிம்ம இராசி அன்பர்களே! இந்த மாதம் இராசிநாதன் அனுகூலமாக இருக்கிறார். எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். தன லாபம் ஏற்படும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம்.

பணவரத்துக் கூடும். காரிய அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்தால் வேலைகளைத் திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி காணப்படும்.

விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். பெண்கள் உதவி கேட்டு உங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வீர்கள்.

அரசியல்வாதிகள், சகாக்களைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். கட்சித் தலைமையின் ஆதரவு கிட்டும். கலைத் துறையினருக்கு மதிப்பு, மரியாதை கூடும். நல்ல வரவேற்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த பின்னடைவு நீங்கும்.

**மகம்:** இந்த மாதம் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. மாணவர்களுக்கு, கல்வி தொடர்பான செலவு கூடும். கவனத்துடன் பாடங்களைப் படிப்பது அவசியம். எதிரில் இருப்பவர்களை எடைபோடும் சாமர்த்தியம் உண்டாகும். பெண்கள் பெரியோர்களின் ஆசியைப் பெற்றால் எந்தக் காரியத்திலும் வெற்றி பெறலாம். உடல் நலத்தில் அக்கறை காட்டுவது அவசியம்.




**பூரம்:** இந்த மாதம் முன் கோபம் வந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. பணவரத்து அதிகரிக்கும். மனோ தைரியம் கூடும். எப்படிப்பட்ட சூழ்நிலையையும் சமாளித்து முன்னேறிவிடுவீர்கள்.

ஆனால் மற்றவர்களின் சூழ்ச்சிக்கு ஆளாகாமல் கவனமாக இருப்பது அவசியம். வழக்கு விவகாரங்களில் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்கள் எதிலும் சுறுசுறுப்புடன் இருப்பது அவசியம். பாடங்களைப் படிப்பதில் கவனம் தேவை.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாக எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, வருமான உயர்வு ஆகியவை இருக்கும். சக ஊழியர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. தெய்வப் பணிகளில் ஈடுபட்டால் மனத்தெளிவும், நிம்மதியும் உண்டாகத் தடை இருக்காது.

**பரிகாரம்:** தினமும் சூரிய நமஸ்காரம் செய்து சிவனை வணங்க பிரச்சினைகள் குறையும். காரிய வெற்றி உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 20, 21

**அதிஷ்ட தினங்கள்:** 26, 27

## மதிப்பும் மரியாதையும் உயரும்!



**கிரகநிலை** - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் புதன், சனி, ராகு - தொழில் ஸ்தானத்தில் குரு(வ) - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிக்கும் கன்னி இராசி அன்பர்களே! இந்த மாதம் எல்லாக் காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். இராசிநாதனின் சார பலத்தின் மூலம் முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும்.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கு இடையே மகிழ்ச்சி கூடும்.

உங்கள் சொற்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பெண்களுக்கு, நிதானமாகப் பேசுவது நன்மை தரும். அரசியல்வாதிகளுக்கு கோஷ்டி சண்டையில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. எனினும் கட்சி மேல்மட்டத்தில் மதிக்கப்படுவீர்கள். கலைத்துறையினருக்கு மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவர். பழைய நிறுவனத்தில் இருந்து புதிய வாய்ப்புத் தேடி வரும். மாணவர்களுக்கு, புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே நெருக்கம் கூடும். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். குடும்பத்தாருடன் விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நேரலாம். உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் கூடும். புது முயற்சிகளில் ஈடுபடுவது வெற்றியைத் தரும். சக மாணவர்களிடம் பொறுமையுடன் நடந்துகொள்வது அவசியம்.




**அஸ்தம்:** இந்த மாதம் முன் கோபத்தைக் குறைத்து நிதானத்தை கடைப்பிடிப்பது பிரச்சினைகள் வராமல் தடுக்கும். பணவரத்து திருப்தி தரும். மாணவர்கள் மிகவும் கவனத்துடன் பாடங்களைப் படிப்பது கூடுதல் மதிப்பெண் பெற உதவும். எதையும் சமாளிக்கும் திறமை ஏற்படும். உழைத்துப் பயனடைய முடியும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். நண்பர்களிடம் அதிக உதவியை எதிர்பார்த்தால் ஏமாற்றம் உண்டாக்கூடும்.

**சித்திரை 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் மனக் குழப்பம் தீரும். எதிலும் பயம் உண்டாகும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடை, தாமதம் ஏற்படும். சங்கடமான சூழ்நிலையைச் சந்திக்க வேண்டி இருக்கும். ஜீரணக் கோளாறு போன்ற ஏதாவது ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். செலவுகள் அதிகரிக்கும். வழக்கமான பணிகளில் ஈடுபட்டு செலவினத்தை அதிகப்படுத்தாமல் இருப்பது நன்மை தரும். பெரியவர்களுக்கு முடிந்த அளவிற்கு உதவி செய்வது நலம் தரும்.

**பரிகாரம்:** வைரவரை வணங்க கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 22, 23

**அதிஷ்ட தினங்கள்:** 01, 02, 28

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலை

## அவலத்தில் அக்கரைவெளி விவசாயிகள்

**(முல்லைத்தீவு)**

**முல்லைத்தீவில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூடைகளை அங்கிருந்து எடுத்துச் செல்லமுடியாமல் வயல்வெளிகளிலும், வீதிகளிலும் நீண்ட நாட்களாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளதுடன், விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.**



முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கமநல சேவைநிலையப் பிரிவிற்குட்பட்ட, தமிழர்களின் பூர்வீக அக்கரைவெளி விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையினாலும், குறித்த வீதியில் அமைந்துள்ள விளாத்தியடி இறக்கப்பாலம் உடைப்பெடுத்துள்ளதாலும் அக்கரைவெளி விவசாய நிலங்களுக்குச் செல்வதற்குரிய போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

குறிப்பாக , 800 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்களில் அறுவடை மேற்கொள்ளப்பட்ட 5000 வரையிலான நெல் மூடைகள் அங்கிருந்து எடுத்துச் செல்ல முடியாத நிலையில் வீதியோரங்களிலும், வயல்வெளிகளிலும் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு இவ்வாறு எடுத்துச்செல்ல முடியாத நிலையில் 15நாட்கள் வரையில் அங்கு நெல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில் அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் நெல்மூடைகள் மூழ்கிப் பாதிப்படைந்துள்ளன.

இதனால், அக்கரைவெளியில் தற்போது 200இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதனைவிட இன்னும் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் பலநூற்றுக்கணக்கான விவசாய நிலங்கள் அக்கரைவெளியில் காணப்படுகின்ற போதும் குறித்த வீதிப் பாதிப்பால் விவசாயிகள் அறுவடை செய்வதிலும் தயக்கங்காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் விவசாயிகளின் முறையீட்டிற்கு அமைவாக அப்பகுதிக்கு சென்ற வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விவசாயிகள் எதிர்நோக்கும் பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டதுடன், விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பாதிப்பு நிலமைகளைச் சீர்செய்வதற்கு தம்மால் கவனஞ் செலுத்தப்படுமெனத் தெரிவித்துள்ளார். (8-299)



தொண்டைமானாறு சின்னக்கடற்கரையில் பொலிஸார், சமூக மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து அண்மையில் சிரமதானம் மேற்கொண்டனர்.

(படம்:-மகாலிங்கம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 160 | -- |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 500 | 400 | 500 |
| தக்காளி | 250 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 250 | 200 | 180 |
| கோவா | 250 | 240 | 300 | 300 | 250 |
| கரட் | 300 | 400 | 500 | 400 | 400 |
| பூசணி | 100 | 120 | 100 | 150 | 100 |
| புடோல் | 160 | 200 | 200 | 400 | 200 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 250 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 | 180 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 600 | 500 |
| வெண்டக்காய் | 350 | 400 | 400 | 400 | 250 |
| கருணைக் கிழங்கு | 250 | 260 | 300 | 300 | -- |
| பயற்றங்காய் | 450 | 500 | 400 | 600 | 500 |
| லீக்ஸ் | 400 | 450 | 350 | 400 | 400 |
| பீற்றூட் | 250 | 300 | 400 | 300 | 300 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 1000 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- |
| போஞ்சி | 300 | 250 | 400 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 40-140 | 200 | 100 | -- |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 | 120-160 | -- |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 200 | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 150 | 80 | -- |
| வல்லாரை | 50 | 50 | 100 | 100 | -- |
| ஈரப்பலா | 150 | 150 | 150 | 150 | -- |


## இராசிபலன்

07.02.2026
தை 24, சனிக்கிழமை
சஷ்டி பின்னிரவு 5.17 மணிவரை


சித்திரை பின்னிரவு 4.45 மணிவரை
சுப நேரம் 3.35-5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

சந்திராஷ்டமம்:
பூரட்டாதி


**வளவன்**





நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல் நலன் சீராகும், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பயணங்களால் பலனுண்டு.




பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.




உறவு-பகை பாராமல் உதவும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காண்பீர்கள்.




சுப செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று கூடும், பயணங்களால் பலனுண்டு.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர், நண்பர்களிடம் பேசும்போது நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, வேலைச்சுமை கூடும் வாய்ப்புண்டு.




பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.




முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டலாம்.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் அழைப்புகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் திருப்தியுண்டு.

**மனம் திறந்து பேசு ஆனால் எல்லாவற்றையும் பேசிவிடாதே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 972





குதிரைகளை வேகமாகச் செலுத்திக் கொண்டு குரல் வந்த திசையை நோக்கி அவர்கள் சென்றார்கள். ஏரிக்கரையின் ஒரு திருப்பம் திரும்பியதும் அவர்கள் கண்ட காட்சி இருவரையும் திடுக்கிட்டுத் திகில் கொள்ளும்படிச் செய்து விட்டது.

நந்தினியும் மணிமேகலையும் படித்துறையில் குளிப்பதற்காக இறங்கிக் கொண்டிருந்த சமயத்தில், அருகில் சாய்ந்திருந்த மரக்கிளை ஒன்றின் மீது சிறுத்தை சிறிது சிறிதாக ஊர்ந்து மேலேறிக் கொண்டிருந்தது. பன்றியோடு போட்ட சண்டையில் நன்றாக அடிபட்டுக் காயமுற்றிருந்த அந்தச் சிறுத்தை அப்போது தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற நிலையில் இருந்தது.

ஆனால் இது அந்தப் புலியைத் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அடுத்த கணம் சிறுத்தை தண்ணீரில் நின்ற பெண்களின் மீது பாயப் போகிறதென்று கரிகாலரும், வந்தியத்தேவனும் எண்ணினார்கள்.

வந்தியத்தேவன் வேலை உபயோகிக்கத் தயங்கினான். வேல் தவறிப் பெண்களின் மீது விழுந்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்தான். கரிகாலருக்கு அத்தகைய தயக்கம் ஒன்றும் ஏற்படவில்லை, வளைத்திருந்த வில்லில் அம்பைக் கோர்த்து நன்றாகக் குறி பார்த்து இழுத்து விட்டார். அம்பு விர்ரென்று சென்று சிறுத்தையின் அடி வயிற்றில் பாய்ந்தது. சிறுத்தை பயங்கரமாக உறுமிக் கொண்டு அப்பாலிருந்த பெண்களின் மீது பாய்ந்தது. அடுத்த கணத்தில் என்ன நேர்ந்தது என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியாதபடி ஒரே குழப்பமாகிவிட்டது. சிறுத்தையும் பெண்கள் இருவரும் திடீரென்று மறைந்து விட்டார்கள்.

சில கணநேரம் கழித்து மூவரும் வெவ்வேறு இடத்தில் தண்ணீருக்குள்ளிருந்து வெளியே தலையை நீட்டினார்கள். ஏரியின் நீரோடு இரத்தம் கலந்து செக்கச் செவேலென்று ஆயிற்று.

### 44ஆம் அத்தியாயம்
### காதலும் பழியும்

இரு நண்பர்களும் மேற்கூறியவற்றையெல்லாம் திகிலுடன் பார்த்துக் கொண்டு தானிருந்தார்கள். குதிரைகள் மீதிருந்து குதித்தார்கள். தண்ணீர் கரையோரம் பாய்ந்து வந்தார்கள். இதற்குள் சிறுத்தை தண்ணீரிலே சிறிது தூரம் சென்று விட்டது! அது மிதந்த விதத்தைப் பார்த்தால் அது ஒரு வழியாகப் பிராணனை விட்டு விட்டது என்று தோன்றியது. பெண்மணிகள் இருவரும் புலியினால் எவ்வளவு காயப்படுத்தப்பட்டார்கள் என்பது ஒன்றும் தெரியவில்லை. இருவரும் தண்ணீரில் குதித்துப் பெண்மணிகளை நோக்கிச் சென்றார்கள்.

முதலில் வந்தியத்தேவன் மணிமேகலையை அணுகிச் சென்றான். ஏனெனில் நந்தினியை நெருங்குவதற்கு அவனுக்கு அச்சமாக இருந்தது. மணிமேகலைக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை.

புலி விழுந்த வேகத்தில் அவளும் தண்ணீரில் விழுந்து முழுகியதில் சிறிது மூச்சுத் திணறியதைத் தவிர வேறொன்றும் அவளுக்கு நேரவில்லை! வந்தியத்தேவன் தன் அருகில் வருவதைப் பார்த்ததும் அவள் எல்லையில்லாத உள்ளக் கிளர்ச்சி அடைந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள். கரிகாலர் வந்தியத்தேவனுடைய கையைப் பிடித்து நிறுத்தி நந்தினியின் பக்கம் அனுப்பி விட்டுத் தன்னை நோக்கி வருவதை அவள் அறிய வில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆண்டவன் செயலை ஆராயாதே!



அரசர் சாலமன் சிறந்த அறிஞராக விளங்கினார். ஒருநாள் அவர், "இந்த உல கத்தில் நல்லவர்கள் பலர் ஏழையாக இருக்கிறார்கள். கெட்டவர்கள் செல்வச் செழிப்பில் மிதக்கிறார்கள். ஒரு குழந்தையைக் கூடக் காப்பாற்ற வழியில்லாத ஏழைக்கு நிறைய குழந்தை கள் பிறக்கின்றன. எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் வளர்க்கக் கூடிய செல்வனுக்கோ குழந்தையே பிறப்பது இல்லை.

இது கடவுளின் செயலா அல்லது சாத்தானின் செயலா? கடவுளின் செயலாக இருக்குமானால் ஏன் இந்த முரண்பாடு? சாத்தானின் செயல் என்றால் கடவுள் ஆற்றலையும் மிஞ்சியது சாத்தானின் ஆற்றலா?" என்று சிந்தனையில் ஆழ்ந்தார்.

அன்று இரவு உறங்கும் வரை அவரால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

காலையில் எழுந்ததும் மீண்டும் இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே கடற்கரை ஓரமாக நடந்தார். அன்றும் அவரால் எதையும் முடிவு செய்ய இயலவில்லை. இப்படியே பல நாட்கள் கடந்தன.

வழக்கம் போல் ஒருநாள் காலையில் இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே நட க்கத் தொடங்கினார். அப்பொழுது கடற்கரையில் இருந்த சிறுவன் ஒருவன் கையிலிருந்த கொட்டாங்கச்சியால் கடல் நீரை மொண்டு கரையில் ஊற்றிக் கொண்டிருந்தான்.

மாலை நேரம் வந்தது. சாலமன் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அந்தச் சிறுவன் தன் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவனைப் பார் த்துச் சாலமன், "தம்பி! இருட்டி விட்டதே. வீட்டிற்குப் போகவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பையன், "ஐயா! தாங்கள் வந்த வேலை முடிந்துவிட்டது. அதனால் வீடு திரும்புகிறீர்கள். என் வேலை இன்னும் முடியவில்லை" என்றான். வியப் படைந்த சாலமன், "அப்படி என்ன வேலை செய்துகொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"இந்தக் கொட்டாங்கச்சியால் கடல் நீரை மறுபக் கம் மாற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளேன்" என்றான் சிறுவன். உடனே சாலமன், "தம்பி! நீ எவ்வளவு? இந்தக் கொட்டாங்கச்சி எவ்வளவு? கடல் நீர் எவ்வளவு? யாராலும் செய்ய முடியாத செயலாயிற்றே. வீண்முயற்சியைக் கைவிட்டு வீட்டிற் குச் செல்" என்றார்.

அப்போது திடீரென அவர் சிந்தனையில் ஒரு தெளிவு ஏற்பட்டது. "நம் அறிவைக் கொண்டு கடவுளின் செயலை ஆராய முயல்வது கொட்டாங்கச்சியைக் கொண்டு கடல் நீரை மாற்ற முயல்வதற்கு ஒப்பாகும்" என்ற உண்மை அப்போது அவருக்கு விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குரிய செயல்களைச் செய்வதே உற்சாகத்தில் நிலைத்திருக்க எளிய வழி.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச தமிழ் எம்.பிகளுக்கு ஓர் அவசர கடிதம்

ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அன்பு வணக்கம். இக்கடிதத்தை எழுத வேண்டும் எனப் பல தடவைகள் நினைத்ததுண்டு. இப்போதுதான் அது சாத்தியமாயிற்று

ஆம், அரச தரப்பில் இருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் தமிழ் மக்களுக்காக ஆற்றக்கூடிய பணிகள் ஏராளம். இருந்தும் நீங்கள் எதுவும் தெரியாதவர்கள் போல இருப்பதுதான் வியப்பாக உள்ளது.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள். எனினும் பாராளுமன்றத்தில் நீங்கள் மௌனமாக இருந்து உங்களின் பதவிக்காலத்தைக் கடத்திவிட வேண்டும் என்பதில் கருசனையோடு இருப்பது தெரிகிறது.

ஆனால் நீங்கள் அவ்வாறு நினைப்பீர்களாயின் அது தர்மமன்று. தவிர, உங்களின் மௌனம் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு இழுக்காக அமையுமேயன்றி அது ஒருபோதும் சாதகமாக அமையாது.

ஆக, ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் உங்களுக்குள் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நீங்கள் வீறாப்புடன் பேசவேண்டும்.

இதற்கும் மேலாக, ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்து; தமிழ் மக்களினதும் தமிழ்ப் பிரதேசங்களிலும் இருக்கக்கூடிய பிரச்சினைகளை எடுத்துக்கூறி அதற்குரிய தீர்வை எட்ட வேண்டும்.

எனினும் நீங்கள் யாரேனும் ஜனாதிபதி அநுரவை கோரிக்கை சார்ந்து சந்தித்ததாகத் தெரியவில்லை.

ஆம், இப்போது இயக்கச்சியில் இருக்கக்கூடிய சுமார் 25 ஏக்கர் நிலத்தை இராணுவத்தின் தேவைக்காக சுவீகரிக்கின்ற முயற்சிகள் நடந்தாகின்றன. அது தொடர்பில் காணி உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

படையினரின் வசமுள்ள காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படுமென ஜனாதிபதி அநுரவின் அறிவிப்பு நம்பிக்கையைத் தந்த நேரத்தில்; இயக்கச்சியில் இராணுவத்துக்குக் காணி சுவீகரிக்கின்ற முயற்சி நடக்கின்றதாயின், அதனை நீங்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டுமல்லவா? அதைச் செய்தீர்களா?

அதுமட்டுமல்ல. எங்கள் தமிழ் மக்கள் வாழ்வியலுக்கான பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

உதாரணத்துக்கு எங்கள் யாழ்.மாவட்டத்தில் ஒரு டிப்பர் மண் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாகிறது எனில், ஏழை மக்கள் வீடு கட்டுவது சாத்தியமா?

கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்வதில் அரச தரப்புடன் கதைத்து அதற்குத் நீங்கள் தீர்வு கண்டீர்களா?

ஆம், செய்ய வேண்டிய பணிகள் எத்தனையோ உண்டு. அதில் கவனம் செலுத்துங்கள். ஜனாதிபதியை சந்தியுங்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் ஜனாதிபதி அநுரவிடம் எடுத்துக் கூறுங்கள். இதுவே உங்களின் முதன்மைப் பணியாக அமையட்டும்.

# வடக்கிலோ தெற்கிலோ இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது

## ■ ■ ■ ■ ■ ஜனாதிபதி அநுர தெரிவிப்பு ■ ■ ■ ■ ■

ஊழல் அற்ற நிர்வாகம், ஜனநாயகம் மற்றும் பொருளாதார சுபீட்சம் பற்றிப் பேச முடியாத எதிர்க்கட்சியில் உள்ள சிலரின் ஒரே கோஷமாக இனவாதம் மாறிவிட்டது. வடக்கிலோ அல்லது தெற்கிலோ இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று (06) பிற்பகல் நியங்கொட பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நம்மிடையே உள்ள உள் முரண்பாடுகளையும் மோதல்களையும் வென்று நம்மை ஒரே தேசமாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

நீண்ட காலமாக உள் மோதல்களால் நாம் பல வீனமடைந்தோம். உள் மோதல்கள் நமது பலத்தைக் குறைக்கின்றன.

சிறிய துரும்புகள் ஒன்றிணைந்து பெரும் பலத்தைக் கொண்டு வருவது போல நாட்டின் அனைத்து மக்களும் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட வேண்டும்.

நமது நாட்டின் முதல் பலம் நமது ஒற்றுமையில்தான் உள்ளது. அதனால்தான் நாம் அதற்காக கடுமையாக உழைக்கிறோம்.

இன்று முதல் முறையாக, இலங்கையில் ஒரு அரசாங்கம் வடக்கு மக்களின் கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு கொழும்பில் இயங்கும் அரசாங்கத்தின் மீது எப்போதும் சந்தேகங்கள் இருந்தன.

இன்று, அந்த சந்தேகம் நீங்கியுள்ளது. இது ஒரு சிறந்த சூழ்நிலை. வடக்கில் இனவாத அரசியல் இயக்கங்களின் இருப்பு நின்றுவிட்டது. பிரதேசம் மற்றும் எல்லைகளால் ஒன்றுபட்டாலும் ஒரு நாடாக ஒன்றுபடாது.

அந்த நாடு ஒன்றுபட அந்த நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும். நமது நாட்டைக் கட்டியெழுப்பும் முக்கிய பணி இதுதான் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இனவாதத்தை யார் வேண்டுமானாலும் பரப்பலாம். இன்று மிகச் சிறிய குழுவே அதை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் நம் நாட்டின் உண்மையான பௌத்த மக்கள் அதற்கு பலியாக மாற மாட்டார்கள்.

வடக்கிலோ அல்லது தெற்கிலோ இனவாதத்திற்கு மீண்டும் இடம் கொடுக்க மாட்டோம். அதனால்தான் நாங்கள் அதற்காகப் பாடுபடுகிறோம்.

அதற்குச் சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால் சட்டங்களை மேலும் வலுப்படுத்துவோம் என்றார். *(ம-7)*

## மன்னார் வெள்ளாங்குளத்தில் உழவு இயந்திரம் தடம் புரள்வு

### 12 பேர் படுகாயம்

மன்னார் இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாங்குளம் சந்திப் பகுதியில் உழவுஇயந்திரமொன்று தடம்புரண்டதில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இலுப்பைக் கடவையிலிருந்து ஏ 32 வீதி வழியாக வெள்ளாங்குளம் நோக்கிப் பயணித்த உழவுஇயந்திரம்ஒன்று துணுக்காய் நோக்கி திருப்ப முற்பட்ட சமயம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியில் இருந்த 12 பேர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் ஆதாரவைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை இலுப்பைக்கடவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த உழவு இயந்திரத்தில் 15 பேர் வரையில் மரண வீடு ஒன்றுக்குச் சென்று வெள்ளாங்குளம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

*(ம-7,315)*

## 2025 க.பொ.த சா/த பரீட்சை மேலதிக வகுப்புகளுக்குத் தடை

*(கொழும்பு)*

2025 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை காரணமாக பெப்ரவரி 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவுபெறும் வரை குறித்த பரீட்சைகள் சம்பந்தமான வகுப்புகள் தடை செய்யப்படும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் 3,545 பரீட்சை நிலையங்களில் பெப்ரவரி 17 முதல் 26 ஆம் திகதி வரை குறித்த பரீட்சையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு அமைவாக மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய நடவடிக்கைகளும் பெப்ரவரி 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை முடியும் வரை தடைசெய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. *(ம-7)*

## வவுனியா நகரில்

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 6 உணவகங்களுக்குப் பூட்டு

*(வவுனியா)*

வவுனியா நகரில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 06 பிரபல உணவகங்கள் சுகாதார பரிசோதகர்களால் நேற்று மூடப்பட்டது.

குறித்த உணவகங்கள் சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது அவை சுகாதார சீர்கேட்டுடன் இருந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த உணவகங்களை நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் திருத்தப்பணிகளுக்காக எதிர்வரும் 14 நாட்களுக்கு மூடுமாறு சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொறவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள இரு உணவகங்கள், பழைய பேருந்து நிலையப் பகுதியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகம், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு அண்மையில் அமைந்துள்ள பிரபல உணவகங்களுக்கே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. *(ம-7,250)*

### யாழில் கள்ளமண் டிப்பரை

## 8 கிலோமீற்றர் துரத்திச்சென்று மடக்கிப்பிடித்த பொலிஸார்

யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் கள்ளமண் டிப்பர் ஒன்று சுமார் 8 கிலோமீற்றர் துரத்திச் சென்று பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கள்ளமண் டிப்பர் ஒன்றை பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கிராமக்கோடு சந்தியிலிருந்து மணல்காடு வரை சுமார் 8 கிலோமீற்றர் வரை துரத்திச்சென்று காங்கேசன்துறை சிறப்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தை கைப்பற்றியதுடன் அதன் சாரதியையும் கைது செய்து மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். *(ம-7,104)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான போட்டியை தவிர்க்க வேண்டாம் பாகிஸ்தானுக்கு ஸ்ரீலங்கா அவசர கடிதம்!

2026 ஐ.சி.சி ஆண்கள் ரி- 20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கையில் நடைபெறவுள்ள இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியில் பங்கேற்பது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை காட்டிவரும் தயக்கம் தொடர்பில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதி கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், பாதுகாப்பு, செயற்பாடுகள் மற்றும் பயணச்சீட்டு விற்பனை என அனைத்தையும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் ஏற்கனவே நிறைவு செய்துள்ளது. பாகிஸ்தான் அணி போட்டியில் பங்கேற்காது என்ற செய்திகளால் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த பெருமளவான விடுதி முன்பதிவுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இது இலங்கையின் சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதாரத்தில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்தில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்தோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான போட்டிக்கு நிலவும் பலத்த எதிர்பார்ப்பால் ஏற்கனவே அனைத்து நுழைவுச் சீட்டுகளும் விற்றுத் தீர்ந்துள்ள நிலையில், பாகிஸ்தானின் இந்த நிலைப்பாடு பெரும் பின்னடைவாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலைமை மோசமாக இருந்த காலங்களிலும், ஏனைய நாடுகள் அங்கு செல்லத் தயங்கிய போதும், இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடியதை இக் கடிதம் நினைவூட்டியுள்ளது. அன்று இலங்கை காட்டிய அதே விளையாட்டுப் பண்பையும், ஒத்துழைப்பையும் இப்போது பாகிஸ்தானிடம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனமும் இணைந்து அனைத்து அணிகளுக்கும் உச்ச கட்ட பாதுகாப்பு, நடு நிலைமை மற்றும் தொழில்முறை வசதிகளை வழங்கும் என பாகிஸ்தானுக்கு முழுமையான உறுதி மொழிவழங் கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ரசிகர்களின் நலன் கருதி, போட்டியைப் புறக்கணிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பாகிஸ்தானுக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளது. (3)

## உள்நாட்டு...

கொள்கை மற்றும் தொடர்புடைய சர்வதேசத் தீர்மானங்கள் தொடர்பான சர்வதேச சட்டங்களின்படி அரசாங்கம் செயற்படும் என வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (6) நடைபெற்ற அமர்வின் போது, இலங்கையின் இராணுவ பிரதானிகள் உள்ளிட்ட நால்வருக்கு பிரித்தானியா விதித்துள்ள தடை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசாங்கத்தின் சார்பாக, ஐக்கிய இராச்சியத்தின் இத்தகைய தீர்மானங்கள் நமது நாட்டில் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கத் திட்டங்களைப் பாதிக்கும் என்று நாங்கள் கூறியிருந்தோம். கூடுதலாக, கடந்த காலங்களில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டு வழிமுறைகள் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க அடிப்படையிலான திட்டங்களை நமது அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது.

இதற்கு முன்னர், அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகள் இராணுவ அதிகாரிகள் உட்பட பல்வேறு தரப்பினர் மீதும் தடைகளை விதித்துள்ளன. அந்த வகையில், ஐக்கிய இராச்சியத்தின் இந்த நடவடிக்கை புதியதல்ல.

இருப்பினும் இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தடைகள் சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலுக்கு முரணானவை. இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட இத்தகைய நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது. "அதன்படி, அரசாங்கம் அதை நிராகரித்தாலும், எங்கள் தெளிவான சர்வதேச கொள்கையின்படி சர்வதேச சட்டத்தின்படி நாங்கள் செயற்படுவோம் என்றார். (ம-7)

## 431 சுற்றுலா...

வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் தயாரிக்கப்பட்ட "2026 - 2030 வடக்கு சுற்றுலா அபிவிருத்தி மூலோபாயத் திட்டம்" நேற்று வெள்ளிக்கிழமை (06) வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, திட்ட அறிக்கை ஆளுநரிடம் கையளிக்கப்பட்டதோடு, அத்திட்டம் தொடர்பான விரிவான முன்னளிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், வவுனியாப் பல்கலைக்கழக வியாபாரக் கற்கைகள் பீடத்திடம் இத்திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, பீடாதிபதி கலாநிதி வை.நந்தகோபன் தலைமையிலான விசேட நிபுணர் குழுவினரால் இந்தத் தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட விரிவான ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையில் மொத்தம் 431 சுற்றுலா மையங்கள் இத்திட்டத்தில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டம்: 5 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு 200 மையங்கள், முல்லைத்தீவு மாவட்டம்: 77 மையங்கள், கிளிநொச்சி மாவட்டம்: 56 மையங்கள், வவுனியா மாவட்டம்: 49 மையங்கள், மன்னார் மாவட்டம்: 49 மையங்கள்.

இவற்றில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னுரிமை அடிப்படையில் தலா 10 சுற்றுலா மையங்களும், மாகாண மட்டத்தில் முன்னுரிமை [illegible] சுற்றுலா மையங்களுமாக மொத்தம் 10 மையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சுற்றுலா மையமும் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணம், அங்குள்ள சுற்றுலா வாய்ப்புகள், அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள், வடக்கின் சுற்றுலாவில் உள்ள பலம் மற்றும் பலவீனங்கள், பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் என அனைத்துத் தரவுகளும் இந்த மூலோபாயத் திட்ட நூலில் விரிவாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

திட்ட அறிக்கையைப் பெற்றுக்கொண்டு கருத்துத் தெரிவித்த ஆளுநர், "இந்தச் சிறந்த திட்டத்தை வெறும் ஆவணமாக மட்டும் வைத்திருக்காது, இதனைச் செயற்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான பொறிமுறையை உடனடியாக உருவாக்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

மேலும், முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு சுற்றுலா மையத்தையும் சுற்றுலாப் பணியக அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களுடனும் கலந்துரையாடி, அபிவிருத்திப் பணிகளை விரைவாக ஆரம்பிக்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார். (ம-7)

## நீதிமன்றைத்...

யாழ். நீதிவான் நீதிமன்றில் லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணமால் ஆக்கப்பட்டுள்ள நிலைமையில் அவர்கள் தொடர்பிலான விபரங்களை வெளிப்படுத்த கோரி வழக்கு தொடரப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு விசாரணைக்காக யாழ். நீதிவான் நீதிமன்றில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்காக [illegible] தருவதற்கு தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து, இணைய வழியில் சாட்சியம் அளிக்க தயார் என மன்றுக்கு கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு ஜனாதிபதி தேர்தல் காலங்களிலும் அதன் பின்னர் ஜனாதிபதியான பின்னரும் யாழ்ப்பாணம் வந்து சென்ற நிலையில் வழக்கு விசாரணைக்காக வருவதை தவிர்ப்பதனை வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணிகள் மன்றில் சுட்டிக்காட்டி இருந்தனர்..

அதனால், மன்று கோட்டாபய ராஜபக்ஷவிற்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் சத்திய கடதாசி ஊடாக மன்றுக்கு தெரிவிக்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் கோட்டபாய ராஜபக்ஷ மன்றில் முன்னிலையாகவில்லை.

அதனையடுத்து இரு தரப்பு சட்டத்தரணிகளும் எழுத்து மூல சமர்ப்பணங்களை செய்யுமாறு மன்று கட்டளையிட்டு வழக்கினை மார்ச் மாதம் 06ஆம் திகதிக்கு திகதியிட்டுள்ளது.

இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ நீதிமன்றத்தைத் தொடர்ச்சியாகப் புறக்கணிப்பதற்கு எதிராகவும் அனைத்துக் காணாமலாக்கப்படல்களுக்கும் நீதியை நிலைநாட்ட கோரியும் யாழில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சமஉரிமைகள் இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக இடம்பெற்ற குறித்த போராட்டத்தில், செம்மணியை மீண்டும் புதைக்க இடமளியோம், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய், மேலதிக அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம், PTA ஐ நீக்கு, அனைத்து இன மக்களுக்கும் சமவுரிமையை உறுதிசெய்யும் புதிய அரசியலமைப்பை வென்றெடுப்போம் என கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சிவகுமார் கரிஸ்ணன் (வயது-16) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவன் மற்றுமொரு மாணவனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தததனாலேயே குறித்த விபத்து சம்பவித்ததாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,250)

## அவசர காலநிலை...

டுள்ளது.

குறித்த தீர்மானத்திற்கு ஆதரவாக 106 வாக்குகளும், எதிராக 02 வாக்குகளும் மாத்திரமே அளிக்கப்பட்டன.

இதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாக்கெடுப்பைக் கோரினார்.

அதன்படி, குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 106 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகிய இருவர் மாத்திரம் அதற்கு எதிராக வாக்களித்தனர். (ம-7)

## ஒரே நாளில்...

ஒரே நாளில் சிறு சிறு சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை இணைந்து, சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் (IMHO) நிதி உதவியில், முற்றிலும் இலவசமான ஒரு நாள் சத்திரசிகிச்சை மையம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு நாளில் சத்திர சிகிச்சை முடிந்து வீடு திரும்ப முடியும்.

சிறு சிறு சத்திரசிகிச்சைகளுக்காக நீண்ட நாள் காத்திருப்பு மற்றும் அதீத செலவைக் குறைக்கும் நோக்கில் இந்த சத்திரசிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படுள்ளது.

இந்தக் கட்டடம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பின் பக்க வீதியில் அமைந்துள்ளது. போதனா வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர் ஒருவர் (வழமையான செயற்பாடு) மருத்துவர், மருத்துவர் நிபுணர்களின் ஆலோசனைக்குப் பின்னர் குறித்த சிறப்பு சத்திரசிகிச்சை நிலையத்துக்கு உள்வாங்கப்படுவர். (ம-7)

## இ.போ.ச பேருந்...

வரலாற்றில் முதன்முறையாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அரச பேருந்துகளில் பெண்கள் நடத்துநர்களாகச் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 20 பெண் நடத்துநர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாகும்புர பல்நோக்குப் போக்குவரத்து மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. (ம-7)

## யாழ்ப்பாணம்...

அனுமதிக்கக் கோரியும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டபாய ராஜபக்ஷ தனது சட்டத்தரணி ஊடாக சத்திய கடதாசியை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவதற்கு என்ன அச்சுறுத்தல் இருக்கிறது என்பதனை நியாமான காரணங்களுடன் சத்தியக்கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் கடந்த வழக்கு தவணையின்போது உத்தரவிட்டிருந்தது.

குறித்த வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று நீதிவான் லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கோட்டாபய ராஜபக்ஷ தரப்பினர் அச்சுறுத்தல் குறித்த சத்தியக் கடதாசியை சமர்ப்பித்த போதும் என்ன காரணத்திற்காக அச்சுறுத்தல் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தவில்லை என்பதை மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## எந்தவொரு...

பாராளுமன்றத்தில் நேற்று (6) "டித்வா" சூறாவளி காரணமாக அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தியமை தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின்போதே பிரதமர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

டித்வா சூறாவளி காரணமாக இந் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளை அனைவரும் நன்கு அறிவர்.

இந்த அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டிய அவசியம் இந்தச் சூழலின் அடிப்படையிலேயே எழுகின்றது. அத்தியாவசிய சேவைகளைப் பேண முடிவதும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தை நியமிப்பதையுமே இதன் மூலம் நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த இரண்டு பிரதான விடயங்களுக்காகவே நாம் இச்சட்டத்தைப் பயன்படுத்துகின்றோம்.

ஏற்பட்டுள்ள நிலைமையின் கீழ் செய்ய வேண்டியவற்றை வினைத்திறனாகவும் மிக வேகமாகவும் முன்னெடுத்து, மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் தேவையைக் கருத்திற்கொண்டே இச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்காக பாராளு மன்றத்தில் இதனைச் சமர்ப்பித்துள்ளோம்" எனத் தெரிவித்தார்.

அத்துடன், ஆதாரமற்ற தகவல்களை வெளியிடுவது எதிர்க்கட்சியின் பழக்கமாக மாறியுள்ளதாகவும், எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது கவலைக்குரிய விடயம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதற்குத் திருகோணமலையில் பிக்குகள் தொடர்பான சம்பவத்தை உதாரணமாகக் காட்டிய பிரதமர், அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கைதுகள் அவசர காலச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டதாக எதிர்க்கட்சியினர் கூறிய போதிலும், அந்தச் சம்பவ தொடர்பான சட்ட நடவடிக்கைகள் சாதாரண சட்டத்தின் கீழேயே முன்னெடுக்கப் பட்டதாகச் சுட்டிக்காட்டினார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் எவற்றைச் செய்ய முடியும் என்பதற்குப் பதிலாக, அரசாங்கம் அவசர காலச் சட்டத்தை எதற்காகப் பயன் படுத்தியது என்பதே இந்த விவாதத்தில் ஆராயப்பட வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் ஒருபோதும் அவசர காலச் சட்டத்தைத் தவறாகப் பயன் படுத்தி ஊடகங்களையோ அல்லது எந்தவொரு மக்கள் போராட்டத்தையோ ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அரசாங்கத்தின் தலையீட்டுடன் அவ்வாறான ஒடுக்கு முறைகள் இடம்பெற்றிருப்பின் அந்தச் சம்பவங்களைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டுமாறும் பிரதமர் சவால் விடுத்தார். (ம-7)












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

K.K.S றோட்டில் அமைந்துள்ள பிரபல Printing நிறுவனம் ஒன்றிற்கு
கீழே உள்ள தகைமை உடையவர்கள் தேவை.

● Graphic Design ● CoralDraw & Photoshop ● Indesign

தெரிந்தவர்கள், அனுபவம் உள்ளவர்கள், வைண்டிங் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.

◆ ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
◆ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(6743)

021 223 1644, 077 833 8625, 077 774 6855



## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை

யாத்திரிகர் : 10 | நாட்கள் : 12

Amount 250,000

**ஆரம்பத் திகதி : 01.03.2026**

தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம்,சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகலான், திருநள்ளாறு, நளன்குளத்தின் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெயலலிதா,அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும், பார்க்கலாம்.

சென்னையில் ஒரு நாள் Shopping

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

◆ யாழ்ப்பாணம் – கொழும்பு
கொழும்பு – யாழ்ப்பாணம் வாகன சேவை உண்டு
◆ **இந்த யாத்திரை ஒவ்வொரு மாதமும் இடம்பெறும்.**

(1997)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
srianganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
Tel : 077 736 2154


## நினைவஞ்சலிக் கூட்டம்

### அமரர்
### அப்பாத்துரை பஞ்சலிங்கம்



கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் ஆகிய மாதிரி முன்பள்ளிகளின் தலைவரும் நிறுவுனரும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் முன்னாள் தலைவருமான அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

காலம் : 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி
பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்

(6751)

பணியை வெறும் கடமையாக அல்லாமல் ஒரு சமூகப் பொறுப்பாகக் கருதி ஒவ்வொரு செயலையும் நியாயம், ஒழுங்கு, நேரமுகாமை, மனிதநேய உணர்வுடன் ஒன்பது தசாப்தங்கள் ஒளிர் விட்டுப் பிரகாசித்து அதன் வழி எங்களை வழி நடாத்தி சிறந்த தலைமுறைகளை உருவாக்கிய எங்களின் அதிபரை நினைவுகூர் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்


G.C.E O/L 2025

## மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

விஞ்ஞானம் | ஆசிரியர் S.கோபிநாத் SLTS,Spl.Trd (Science)

08th February Sunday 3.30 - 6.30 pm [Biology]
10th February Tuesday 3.30 - 6.30 pm [Chemistry]
11th February Wednesday 3.30 - 6.30 pm [Physics]

● எதிர்பார்க்கைப் பகுதிகள் முழுமையாகக் கலந்தரையாடப்படும்.
● எதிர்பார்க்கைப் பகுதிகளுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
● வெளிமாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
● இடநெருக்கடியினைத் தவிர்ப்பதற்கு முற்கூட்டியே கட்டணத்தைச் செலுத்தி பதிவினை மேற்கொள்ளவும். (C-4957)

தீபம் உயர் கல்விக் கல்லூரி
077 2247781 நிர்வாகம்


## 602 பேர் கைது

குற்றச்செயல்கள்மற்றும்போதைப் பொருட்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை இலக்கு வைத்து பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது சுமார் 602 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம-7)


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 194/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= | Max 3 Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 230/= | Max 3 Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 195/= | Max 5Kg |
| 1Kg கடலை | - 335/= | Max 3kg |
| 1Kg சோயா | - 250/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | ~~3000/=~~ |
| 1Kg குத்தரிசி ஆட்டக்காரி | - 265/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை | - 220/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 399/= | ~~480/=~~ |
| 01 மலிபன் பால்மா | - 1120/= | ~~1150/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 285/= | ~~330/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 40/= | ~~70/=~~ |




400g Anchor ~~1150~~ 1095




1Kg சன்லைட் பவுடர் ~~320~~ 270

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:-
happy basket.lk இனை நாடவும். (2027)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


## 6 ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



அன்னை மடியில் 09 . 01 . 1945

இறைவன் மடியில் 15 . 01 . 2020

அமரர்

### திருமதி சுபத்திராதேவி தணிகாசலம்பிள்ளை

**திதி : 07.02.2026**

ஆறு வருடங்கள் கடந்தும் அம்மா!
ஆறாத துன்பத்தில் மூழ்கி வருந்துகின்றோம்
ஆறாக நீங்கள் தந்த பாசத்திற்கு இணையேதம்மா
ஆவலுடன் உங்கள் அரவணைப்பிற்காய்
அன்றாடம் ஏங்கித் தவிக்கிறோம்.

எல்லையற்று நீங்கள் தந்த அன்பைச் சுமந்து
எங்கள் குடும்ப குலவிளக்கே உங்களுக்கு
ஏக்கத்துடன் பூத்தூவி ஆறுதல் கொள்கின்றோம்
என்றென்றும் சுடரேத்தி உங்கள் ஆசி பெற்று
எம்வாழ்வை அமைதியுடன் தொடர்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(C-2007)

"சுபஸ்தான்"
நாச்சிமார்கோவிலடி,
இல. 1036, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org